# மொரீஷியஸில் முருக வழிபாடு

( The Murukan Cult in Mauritius *by Khesaven Sornum* )

***மூலக் கட்டுரை ஆங்கிலத்தில் : கேசவன் சொர்ணம்***

**தமிழ் மொழி பெயர்ப்பு : சாந்திப்பிரியா** ( nrj_1945@yahoo.com )




## முன்னுரை

மிகவும் தொன்மைக் காலம் முட்பட்டே அழகின் உருவானவர், ஞானம் தருபவர் மற்றும் எண்ணற்ற சக்தி மிக்கவர் என தமிழ் இனத்தவரால் போற்றி வணங்கப்பட்டு வருபவர் முருகக் கடவுள். பிரபலமான தமிழ் மொழி நூலான தொல்காப்பியத்தில் அவரை சீயோன் எனவும் பலவேறு ஸ்துதிகள் முலம் பக்தர்கள் அவர் பக்தர்களால் ஆராதிக்கப்படுபவர் என்றும் குறிப்பிடுகின்றது. உலகில் பலவேறு இடங்களிலும் வசிக்கும் தமிழர்களால் போற்றி வணங்குபவர் முருகப் பெருமான். 18 ஆம் நூற்றாண்டில் பிரான்ஸ் நாட்டவர் மொரீஷியஸ் தீவை தங்கள் வசம் எடுத்தக் கொண்ட பொழுது கைவினைக் கலைஞர்களாகவும், வியாபாரிகளுமாக வந்தவர்களே தமிழர்கள். அவர்களே பல வழி பாட்டுத் தலங்களை அங்கு கட்டினர். அதன் பின்னர் குறிப்பிட்டக் கால தொழில் ஒப்பந்தத்தின்படி சீனா, ஆப்ரிக்கா, மற்றும் மடகாஸ்கர் போன்ற இடங்களில் இருந்தும் அங்கு பணிபுரிய வந்த பலவேறு இனத்தவர்களுடன் சேர்ந்து இருந்தாலும் இந்தியாவில் இருந்து சென்ற தமிழர்கள் அங்கு சென்ற பின் கூட தங்களுடைய கலாசாரங்களை மாற்றிக் கொள்ளாமல் அங்கு இருந்து வந்தனர். அங்கு வந்த தமிழர்கள் தங்கள் முன்னோர்கள் விட்டுச் சென்ற கலாசாரங்களைத் தொடர்ந்து கொண்டு தாங்கள் தனித் தன்மை வாய்ந்த தமிழ் இன மக்கள் என்பதை தங்களுடைய செயல்பாடுகளில் காட்டிக்கொண்டு இருந்தபடி வாழ்ந்து கொண்டு இருந்தனர். மொரிஷியஸ் தீவில் இருந்த தமிழ் இன மக்களை அங்குள்ளவர்கள் தமிழர்கள் என்று கருதாமல் அவர்களை முருக பக்தர்கள் என்ற கோணத்தில் பார்க்கின்றனர். நாமக்கல் கவிஞரான இராமலிங்கப் பிள்ளை எழுதினார் " தமிழர்கள் என்ற இனம் ஒன்று கிடையாது , ஆனால் அவர்கள் தனித் தன்மை வாய்ந்தவர்கள் "

அங்குள்ள மாநிலங்களான திமிதி, கஞ்சி, கோவிந்தன் போன்ற பல பகுதிகளிலும் பலவேறு விழாக்கள் நடைபெற்றாலும் தைபூசம் மற்றும் காவடி தூக்குதல் போன்ற விழாக்கள் தேசிய அளவில் நடைபெறுகின்றன. கிராம மக்கள் மட்டுமே ஈடுபாடு கொண்டிருந்த வந்த இயக்கம் என நினைத்தது போய் எல்லா இடங்களிலும் அது பரவி விட்டது. தை பூசக் காவடி விழாக்கள் தேசிய அளவில் மக்கள் பங்கு பெறப்படும் விழாவாக மாறியதினால் அந்த விழாக்கள் பெரும் உற்சாகத்துடன் கொண்டாடப்படுகின்றது. கடந்த அரை நூற்றாண்டுகளாக தைப் பூசத் திருவிழா நடைபெறும் தினம் அரசு விடுமுறை தினமாக அறிவிக்கப்பட்டன. மொரிஷியஸ் தீவிற்கு வந்துள்ள தமிழர்கள் அவர்களின் மதப் பழக்கங்களின் மூலம் அறியப் படுகின்றனர். அங்கு நடக்கும் அனைத்து திருவிழாக்கள் மற்றும் சமூக கலாசார நிகழ்சிகள் அனைத்திலும் தமிழ் மொழியே அதிக அளவில் பயன்படுத்தப் படுகின்றது அங்கு நடக்கும் விழாக்களின் தன்மையைப் பார்த்தாலே மொரிஷியஸ் நாட்டில் முருகன் பக்தி இயக்கம் எந்த அளவு அங்குள்ள மக்களின் வாழ்க்கையுடன் ஒண்ணிணைந்து உள்ளது என்பதைத் தெரிந்து கொள்ளலாம்.



மொரீஷியஸ் பூங்கா ஒன்றில் காணப்படும் எட்டு அடி உயர சண்முகர் சிலை

## மொரிஷியஸ்ஸில் முருகன் பக்தி இயக்கம்

முதன் முதலாக பிரெஞ்சு நாட்டினர் அந்தத் தீவை ஆண்டு வந்த பொழுதுதான் அங்கு வந்த தமிழக மக்களால் முருகன் பக்தி இயக்கத்தின் விதை போடப்பட்டது. அவர்கள் தங்களுடைய மதத்தில் இருந்த ஆழமான நம்பிக்கையின் காரணமாக ஆலயங்களைக் கட்டலாயினர். ஆகம முறைப்படி சில ஆலயங்கள் அமைக்கப்பட்டன. போர்ட் லுயீஸ் (**Port-Louis**). என்ற இடத்தில் உள்ள சொக்கலிங்கம் மீனாட்சி அம்மன் ஆலயம் அதற்கு ஒரு உதாரணம். முருகன் ஆலயங்களில் மிகப் பழமையானது கிளமன்சியா Clemencia என்ற இடத்தில் உள்ள தண்டாயுதபாணி ஆலயம் ஆகும்.

இந்தியாவின் பல பாகங்களில் இருந்தும் தொழில் ஒப்பந்தத்தின்படி அங்கு வந்த தொழிலாளிகள் ( சக்கரை ) கரும்பு தோட்டங்களில் வேலையில் அமர்ந்தனர். அனைவரும் ஒன்று சேர்ந்து வழிபட அந்த இடங்களில் அவர்களால் ஆலயம் அமைக்கப்பட்டன. அதற்கு பிரான்ஸ் நாட்டைச் சார்ந்த முதலாளிகள் ஒத்துழைப்புத் தந்தனர். அவர்கள் ஆலயம் அமைக்க பொருளாதார உதவிகள் மட்டும் அல்ல இடமும் தந்து அறுவடைக்கு முன் அந்த ஆலய விழாக்களை நடக்தவும் ஏற்பாடுகள் செய்து தந்தனர்.

1960 ஆம் ஆண்டிலேயே 110 க்கும் மேற்பட்ட ஆலயங்கள் தோன்றின. மொரிஷியஸ் நாட்டில் இருந்த தமிழ் ஆலய சங்கத்துடன் பதிவு செய்து கொண்டு அதனுடன் இணைந்து இருந்த மற்ற ஆலயங்களுக்கும் மானியத் தொகைகளை அரசாங்கம் தந்தது. இப்பொழுது உள்ள ஆலயங்களில் முப்பது ஆலயங்களில் முருகனே மூலதெய்வமாக வணங்கப்பட்டுக் கொண்டு இருக்கையில் மற்ற சில

ஆலயங்களில் அம்மனும் சிவனும் முக்கிய தெய்வங்களாக வழிபடப்பட்டுக் கொண்டு இருந்தாலும் அங்கும் முருகனுக்கு சன்னதிகள் உள்ளன. அனைத்து ஆலயங்களிலும் முருகனுக்குக் காவடி எடுக்கும் திருவிழா நடைபெறுகின்றது.

முருக பக்தி இயக்கத்தில் தீவீரமாக பக்தி கொண்டிருந்த இராஜரத்தின முதலியார் என்பவர் 1874 ஆம் ஆண்டிலேயே போர்ட் லுயீஸ் நகரில் தன் குழுவினருடன் காவடி யாத்திரை செல்ல அனுமதிக்கும்படி விண்ணப்பித்து இருந்தார். அது முதல் மெல்ல மெல்ல முருகன் இயக்கமும் வளர்ந்து வந்தது. அங்குள்ள ஆலயங்களில் பூஜைகள் செய்ய அர்சகர்கள் தமிழ்நாட்டில் இருந்து வரவழிக்கப் பட்ட பொழுதிலும் உள்ளூரில் உள்ள பல இளைஞர்கள் அந்த ஆலயங்களில அர்சகர்களாகப் பணிபுரிய் ஆர்வமுடன் உள்ளனர். கடந்த இருபத்தி ஐந்து வருடங்களாக தை பூசத் திருவிழாவைத் தவிற வேறு பல உற்சவங்களும் அங்கு நடைபெறுகின்றன. அவற்றில் பங்குனி உத்திரம், சித்திரா பௌர்ணமி, ஆடிக் கிருத்திகை, ஆவணி மூலம், வைகாசி விசாகம், கந்த சஷ்டி, கார்த்திகை தீபம் போன்றவை அடங்கும்.

திருப்புகழ் பாடல்கள் பள்ளிகளில் கற்றுத் தரப்படுகின்றது. திராவிடர் கால கலை அமைப்பில் பல ஆலயங்கள் புதுப்பிக்கப் படுகின்றன. கலியுக வரதன் என்ற பெயரில் முருகன் பக்தி இயக்கம் வளர்ந்து கொண்டிருக்க பத்திரிகைகளும் தங்கள் பங்கிற்கான ஆதரவை கொடுத்துக் கொண்டு இருக்கும் நிலையில் வரும் காலத்தில் மொரீஷியஸ் தீவு முருகன் பக்தி இயக்கத்தினால் மேலும் பெருமை அடையும். தமிழ்நாடு மற்றும் ஸ்ரீ லங்காவில் இருந்து முன்னரே வந்துள்ள அர்சகர்களும் முதியோர்களும் கூடுமானவரை அனைத்து ஆலயத்திலும் ஒரே முறையில் அமைந்த வழிபாட்டு முறையை கொண்டு வர முயலுகின்றனர்.

## வழிபாட்டுத் தலங்கள்

அங்கு குடியேறி இருந்த தமிழர்கள் தங்களுக்கு ஒரு வழிபாட்டுத் தலம் வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தனர். அனைத்துத் தமிழர்கள் வீட்டிலும் முருகனின் படம், வேல், மற்றும் செம்புக் கலசம் உள்ளதைக் காணலாம். அவை முருக வழிபாட்டிற்கு தேவையான முக்கிய பண்டங்கள். தாங்கள் வேலைச் செய்யம் கரும்புத் தோட்டங்களில் அங்கு கிடைக்கும் இடத்திற்கு ஏற்ப சில இடங்களில் பெரியதாகவும் சில இடங்களில் சிறிய அளவிலும் ஆலயங்களை அங்குள்ள தமிழர்கள் நிறுவி உள்ளனர்.

மலைகள், காடுகள் போன்ற இடங்களில் இருந்த இயற்கையின் அற்புதங்களில் பண்டையத் தமிழர்கள் மனது மயங்கியது. அதனால் மலைப்புறப் பகுதிகளில வசித்தவர்கள் நாளடைவில் மெல்ல குடிபெயர்ந்து கடற்கறைகளை அடைந்து, அங்கிருந்து கடல் மூலம் வேறு பல இடங்களுக்கும்செல்லத் துவங்கினர். இயற்கையின் அற்புதங்கள் அவர்களை கவர்ந்து இழுத்திட அவைகளே இறைவன் வாழும் இடம் என எண்ணி இயற்கையையே வழிபடத் துவங்க, அந்த வழிபாடு மெல்ல முருக வழிபாட்டில் அவர்களைக் கொண்டு விட்டுவிட்டது.

மொரீஷியஸ்ஸில் அவரவர்கள் இருந்த இடங்களின் சூழ்நிலைகளுக்கு ஏற்ப முருகன் இயக்கத்தின் வழிபாட்டுத் தன்மை அமைந்து இருந்தது. காவடி ஊர்வலங்கள் நதிக் கரைகள் மற்றும் ஆற்றங்கரைகளில் இருந்து துவங்குகின்றன. அதனால்தான் பல முருகன் ஆலயங்கள் கரும்பாலைப்

பகுதிகளிலும் மலைப் பகுதிகளை ஒட்டியே உள்ளன. அதன் காரணம் முருகன் மலை மீது இருப்பதையே விரும்புகின்றார் என நம்புவதுதான். தொல்காப்பியத்தில் கூட அவர் உள்ள இடத்தை சீவன் மேய மெய்வரை உலகம் '(**Cēyon meya maivarai ulagam**)'. என்று கூறப்பட்டு உள்ளது. நக்கீரர் கூற்றின்படி முருகன் அமர்ந்து உள்ள முக்கியமான இடங்களைப் படைவீடு என்று கூறுவர். அது பற்றி திருமுருகாற்றுப்படையிலும் குறிப்பிடப்பட்டு உள்ளது. தமிழர்களைப் பொறுத்தவரை முருக வழி பாட்டின் முக்கியத் தலம் பழனிமலைதான் என்று கருதப்படுகின்றது. அதை தமிழர்களின் மெக்கா என்று கூடக் கூறலாம். மொரீஷியஸ் தமிழர்களின் படைவீடாக கார்ப்ஸ் டீ கார்டே (Corps de Garde) என்ற மலையில் உள்ள முருகன் கோவிலே கருதப்படுகின்றது.

> " கடவுளே நான் தணிகை மலையைப் பார்த்தது இல்லை. பழனி மலையையும் பார்த்தது இல்லை. எனக்கு அதனால் எற்படும் துயரத்திற்கு அளவே இல்லை. அதனால் என்னைப் பொறுத்த மட்டில் கொடரீ போர்னஸ் மலையே (**Quatre Bornes Malai**) நீ வாழும் படை வீடு "

இப்படிப்பட்ட மனம் உருகும் பாடல்கள் மொரீஷியஸ் கவிஞர் பீ. தீமலைசெட்டி என்பவர் இயற்றிய மொரீஷியஸ் முருகன் பாமாலையில் உண்டு. மொரீஷியஸ் முழுவதிலும் முருக வழிபாடு உண்டு.

## வேல்

ஈட்டியைப் போலத் தோற்றம் தரும் வேல் முக்தியைக் கொடுப்பதை காட்டும் ஒரு சின்னம். ஞான சக்தியைக் குறிப்பதும் அதுவே. முருகனின் அவதாரமாக அதை வணங்குவது உண்டு. முருகனைக் குறிக்கும் புனிதச் சின்னம் அது.

காவடிகளில் முன்னிலை வகுப்பது சக்தி வேலாகும். ஊர்வலம் செல்லத் துவங்கும் முன்னர் வேலுக்கு அபிஷேகம் செய்வது முக்கிய சடங்கு. பல முருக பக்தர்கள் தங்கள் உடலில் வேல் உருவத்தைப் பச்சைக் குத்தி இருப்பார்கள். காவடி எடுத்துச் செல்பவர்கள் தங்களுடைய நாக்குகளிலும், உடலின் பல பகுதிகளிலும், கன்னங்களிலும் வெள்ளியிலான சிறிய வேல்களை குத்திக் கொண்டு நடப்பது உண்டு. காவடிகளிலும் பால் குடங்களிலும், மற்றும் எலுமிச்சை பழங்களிலும் சிறு வேல் ஒன்றைக் குத்திய அதற்கு மாலைப்போட்டு ஊர்வலத்தில் எடுத்துச் செல்வார்கள். வெற்றிவேல் முருகனுக்கு வேல், வெற்றிவேல் முருகனுக்கு வேல் என்ற கோஷங்களை எழுப்பியபடிச் செல்வார்கள். மொரீஷியஸ்ஸில் வேல் என்ற வார்த்தை வருமாறு ஆயிரக்கணக்கானவர்கள் தங்களுடைய பெயர்களை வைத்திருக்கின்றனர். தங்கவேல், பழனிவேல், குமரவேல், வடிவேல், கதிர்வேல், செந்திலவேல், மற்றும் வேலன் போன்றவை அவற்றில் சில. குழந்தைகளுக்கு பெயர் வைக்கையில் முருகன் பெயருக்கு முக்கியத்துவம் கொடுப்பார்கள்.

## பட்டினி விரதம்

கடவுள் பக்தி மிக்கவர்கள் தமிழர்கள். அந்த உணர்வு முக்கியமாக முருகனின் விழாக்கள் நடைபெறும் சமயத்தில் அதிகம் ஆவதுண்டு. அதன் விளைவாகத்தான் பக்திபூர்வமாக நாள் முழுவதும் உணவு அருந்தாமல் பட்டினி விரதம் இருப்பது மிகவும் முக்கியமானதாகக் கருதப்படுகின்றது. வெள்ளிக்கிழமைகளில் விரதம் இருப்பதும், சைவ உணவை மட்டுமே அருந்திவிட்டு ஆலயங்களுக்குச் செல்வார்கள். ஆனால் இப்பொழுது எல்லாம் முருகனுக்கு உகந்த நாளாக செவ்வாய்

கிழமைகளைக் கருதுகின்றனர். ஒவ்ஒரு மாதமும் சஷ்டி மற்றும் கிருத்திகை தினங்களில் பலர் விரதம் அனுசரிக்கின்றனர்.

காவடியில் கலந்து கொள்ளும் முதல் பத்து நாட்களும் மிகவும் கட்டுப்பாட்டுடன் இருப்பது அவசியம். சைவ உணவு அருந்தியும், வெறும் தரையில் படுத்து உறங்கியும், மது அருந்துவதைத் தவிர்த்தும் , பெண்களுடன் உறவு கொள்வது போன்றவற்றையும் தவிர்கின்றனர். வீட்டில் சமைத்த உணவுகளை மட்டும் உட்கொள்வது, கல்யாணங்கள், சாவு வீட்டிற்கு செல்லுதல் போன்றவற்றைத் தவிர்பதும் மிக முக்கியம் எனக் கருதகின்றனர். அதனால்தான் தை மாதங்களில் மொரீஷியஸ் தீவில் திருமணங்கள் செய்வது இல்லை. காவடி எடுத்துச் செல்பவர்கள் தங்களுடைய வாய்களை துணியினால் கட்டிக் கொண்டோ அல்லது நாக்குகளில் அலகுகள் குத்திக் கொண்டோ இருக்க வேண்டும். சிலர் ஆணிஊசிகள் குத்திய படுக்கையில் படுத்தும், ஆணிகள் குத்திய காலணிகளை அணிந்து கொண்டும் தங்கள் உடம்புகளில் அலகு குத்திக் கொண்டு அதன் மூலம் தேர்களை இழுத்துக் கொண்டும், கடும் வெய்யிலிலும் வெறும் கால்களுடன் நடந்தும் சென்றபடிம் இருந்தவண்ணம் வழிபாடு செய்கின்றனர்.

## இதயத்தை உலுக்கும் புலம்பல்கள் என்ற துதிப் பாடல்கள்.

இறந்து போனவர்களுக்கும், பூஜைகள் செய்யும் பொழுதும் முருகனின் அருளை மன்றாடிக் கேட்டுக் கொள்ளும் வகையில் அமைந்த பல புனிதமான படிகங்கள், துதிப் பாடல்களை பாடுவது மொரீஷியஸ் தீவில் மிக சாதாரணமான ஒன்று. அதைப் புலம்பல்கள் என்று கூறுவார்கள். அவைகள் அவினாசிப்பட்டு, ஆறுமுகஸ்வாமி விருத்தம், முருகன் பாமாலை போன்றவை. அந்தப் பாடல்களை பாடுபவர்கள் பாடுவதைச் சற்று நிறுத்தும் பொழுது ஹரஹரா, ஹரஹரா என மற்றவர்கள் உரத்த குரலில் கோஷம் இடுவதும் உண்டு. ஆலயம் செல்லும் வழி நெடுக அது ஒலிக்கும். அந்தப் பாடல்களை பதிவு செய்த ஒலி நாடாக்களையும் ஊர்வலங்கள் நடக்கும் பொழுது போடுவது உண்டு.

> "உன்னை நான் இரு கைகளையும் கூப்பிக் கொண்டு கும்பிடும் பொழுது மனதார எந்த விதமான பாவங்களோ எண்ணங்களோ இதயத்தில் வைத்து இருக்காமல் கும்பிடுகின்றேனா என்று எனக்குத் தெரியவில்லை. என் தெய்வமே, நான் உன் பக்தர்களில் ஒரு எளிமையான சேவகன். இந்த மாயையான உடலை விட்டு என்னை வெளியேற்றும் வரை அமைதியாக நான் வாழ அருள் புரிவாய். ஒரு குதிரையை விட வேகமாக மயில் மீதேறி என்னிடம் நீங்கள் வர வேண்டும் – அவிநாசிப்பட்டு "

## ஊர்வலம்

வேல், பால் குடம் மற்றும் காவடி போன்றவற்றை எடுத்துக் கொண்டு ஆலயத்திற்கு பக்தர்கள் செல்கின்றனர். அதற்கு முன்னர் ஒரு பக்கம் நாதஸ்வர இசைகள் ஒலித்துக் கொண்டிருக்க, வீதிகளில் தேர்களை மெதுவாக இழுத்துக் கொண்டு செல்லும் முருக பக்தர்கள் நடந்தபடியே தொண்டை கிழியும் வகையில்' ஹரஹரா ஹரஹரா என கோஷம் இட்டபடி நடந்து செல்வார்கள். அது அனைவரும் தாமாக வந்து கலந்து கொள்ளும் நிகழ்ச்சி. பக்தர்கள் வாயில் இருந்து ஒலித்துக் கொண்டே இருக்கும் கடவுளின் நாமத்தைக் கேட்டு உணர்ச்சி பொங்க சாமி வந்து ஆடியபடி காவடிக் கூட்டம் செல்வதும் உண்டு. சாலை ஓரங்களில் நின்று கொண்டிரக்கும் பக்தர்கள் தேங்காய், பழங்கள், வெற்றிலை போன்றவற்றை காணிக்கையாகத் தந்து கற்பூரம் ஏற்றி வணங்குவர். சிலர் வழி நெடுக சூரைத் தேங்காய்களை உடைப்பதும், நோயுற்றவர்கள் சாலையில் வரிமறித்தபடி படுத்துக் கொண்டு காவடி

தூக்கிச் செல்பவர்கள் தங்களை தாண்டிப் போகும்படி இருந்தவாறு வழிபடுவதும் உண்டு. காவடியைத் தூக்கிக் கொண்டு செல்பவர்கள் உணர்ச்சி வசப்பட்டு தங்கள் மீது தெய்வம் வந்து விட்டது போல உணருவது உண்டு. அதுவும் தெய்வங்கள் மீது மனம் நெகிழ்ந்து உணர்ச்சியுடன் பாடும் பாடல்களைக் கேட்கும் பொழுது அப்படி தன்னை மறந்த நிலையில் அவர்கள் செல்வது சாதாரணம்.